| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 14 Aug 2026 | மோட்டார் இன்ஷூரன்ஸில் 'நோ க்ளெய்ம் போனஸ்'... பிரீமியத்தைக் குறைக்கும் சூப்பர் சாய்ஸ்! | Vikatan |

# மோட்டார் இன்ஷூரன்ஸில் 'நோ க்ளெய்ம் போனஸ்'... பிரீமியத்தைக் குறைக்கும் சூப்பர் சாய்ஸ்!



எதிர்பாராத சூழலில் யாருக்கு வேண்டு மானாலும், எப்போது வேண்டு மானாலும் விபத்து நடக்கலாம்; வாகனத் திருட்டு நடக்கலாம். விபத்துகள், திருட்டு, வாகன சேதம் போன்ற எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படும் நிதிச் சுமையைச் சமாளிக்க வாகன உரிமையாளர்களுக்கு உதவும் ஒரு முக்கியமான பாதுகாப்பு ஏற்பாடு வாகனக் காப்பீடு. இந்தக் காப்பீட்டை எடுத்து தொடர்ந்து எந்தக் காப்பீட்டு கோரிக்கையும் (Claim) செய்யாமல் இருப்பவர்களுக்குக் காப்பீட்டு நிறுவனங்கள் ஒரு சிறப்பு சலுகையை வழங்குகின்றன. அந்தச் சலுகையே நோ க்ளெய்ம் போனஸ் (No Claim Bonus – NCB).

இந்த என்.சி.பி என்பது காப்பீட்டு புதுப்பித்தலின்போது பிரீமியத்தில் வழங்கப்படும் தள்ளுபடி. தொடர்ந்து பல ஆண்டுகள் க்ளெய்ம் செய்யாமல் இருந்தால் இந்தத் தள்ளுபடி ஆண்டு தோறும் அதிகரிக்கும். நீண்ட காலத்தில் காப்பீட்டுச் செலவை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கக் கூடிய முக்கியமான நன்மைகளில் இதுவும் ஒன்றாக இருப்பதால், என்.சி.பி மோட்டார் காப்பீட்டின் மிகவும் மதிப்புமிக்க அம்சமாக கருதப்படுகிறது. இந்தச் சலுகை எவ்வாறு கணக்கிடப்படுகிறது என அறிந்து வைத்திருப்பது நல்லது.

என்.சி.பி என்றால் என்ன?

ஒரு பாலிசி ஆண்டை எந்தக் காப்பீட்டுக் கோரிக்கையும் செய்யாமல் முழுமையாக நிறைவு செய்யும் பாலிசிதாரருக்கு வழங்கப்படும் வெகுமதியே நோ க்ளெய்ம் போனஸ். இது புதுப்பித்தலின்போது பிரீமியத்தில் தள்ளுபடியாக வழங்கப்படும். க்ளெய்ம் செய்யாத நிலையை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது.

இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், இந்தத் தள்ளுபடி மோட்டார் காப்பீட்டின் 'சொந்த வாகன சேத பாதுகாப்பு (Own Damage)' பிரீமியத்துக்கு மட்டுமே பொருந்தும். மூன்றாம் தரப்பு பொறுப்புக் காப்பீட்டு (Third-Party Liability) பிரீமியத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது. ஏனெனில் அது தனியாக ஒழுங்குபடுத்தப்படும் பிரீமியம்.

தொடர்ச்சியாக க்ளெய்ம் செய்யாமல் இருக்கும் ஆண்டுகள் அதிகரிக்கும்போது என்.சி.பி சதவிகிதமும் அதிகரிக்கும். இதன் மூலம் பாலிசிதாரர்கள் தங்களின் மோட்டார் காப்பீட்டு பிரீமியத்தில் அதிகமான சேமிப்பைப் பெற முடியும்.